1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி 'நாய் வளர்க்கும் திட்டத்தின்கீழ் இராஜபாளையம் இனப்பெருக்கத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா' என்பது. அதற்கு சைதாப்பேட்டையில் ஆரம்பித்திருப்பதாகச் சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் அல்சேஷன் நாய்களுக்குப் பதிலாக, வசதி படைத்தவர்கள், இராஜபாளையம் நாய்கள் வளர்த்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார்கள். அப்படிப்பட்ட திட்டம் ஒன்றும் இல்லை.

(முற்பகல் 9-50)

திரு. பாபு ஜனார்த்தனன் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான இல்லங்கள்.

* வினா எண் 887.—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு சமூக நலத்துறை கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான இல்லங்களை மேலும் கட்டும் உத்தேசமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் தொழுநோய் பிச்சைக்காரர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தொழுநோய் பிச்சைக் காரர்களுக்கான இல்லங்களை மேலும் கட்டும் உத்தேசமில்லை.

(ஆ) மறுவாழ்வு இல்லங்களில் உள்ளவருக்கு துணி நெய்தல், பாய் பின்னுதல், செருப்பு செய்தல், தையல் தொழில், தச்சு வேலை, பட்டுப்புழு வளர்ப்பு, விவசாயம் கயிறு திரித்தல் முதலிய வாழ்க்கைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வெளியில் அனுப்பப்படுகிறார்கள். அவ்வாறு பயிற்சி பெற்று வெளியில் செல்பவர்கள் பிச்சை எடுக்காமல் தொழில் செய்து பிழைக்க உதவுவதே மறுவாழ்வு இல்லங்களின் நோக்கமாகும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் இருக்கும் தொழுநோய் பிச்சைக் காரர்கள் மறுவாழ்வு இல்லத்தில் எவ்வளவு பேர் தற்போது இருக்கிறார்கள் ?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, அரசு பொறுப்பிலே கால்நடை மருந்தகங்கள் தொடங்குவதில் தாமதம் ஏற்படுகிறது என்பதால் பல கிராமங்களில் பொதுமக்களே முன்வந்து கால்நடை மருந்தகத்திற்குக் கட்டிடம் கட்டித்தருகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படி பொது மக்களே கட்டிடம் கட்டித்தரும் இடங்களில் கால்நடை மருந்தகங்களை தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, கால்நடை நிலையங்கள், கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்படுவது என்பதைப் பொறுத்தவரையில் கால்நடைகளின் எண்ணிக்கை, அவற்றின் தேவை, ஏற்கெனவே இருக்கின்ற கால்நடை மருந்தகத்தின் அருகாமை ஆகியவை குறித்து பரிசிலித்து எங்கு தேவைப்படுகிறதோ அங்கே அமைக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட வேண்டுமானால், எந்த ஒன்றியத்தில் திறக்கப்பட வேண்டுமோ அந்த ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றித்தர வேண்டும். அந்தத் தீர்மானம் வரவில்லை என்றால் கால்நடை மருந்தகத்தை ஆரம்பிப்பது கடினம். நிரந்தரக் கட்டிடம் கட்டப்படும் வரையில் மருந்தகம் நடத்துவதற்கு வாடகை இல்லாமல் கட்டிடம் வழங்க அந்த ஒன்றியம் ஏற்பாடு செய்ய வேண்டும். கட்டிடம் கட்டுவதற்கும் இதர காரியங்களுக்கும் ஒரு ஏக்கர் நிலம் தரவேண்டும். கட்டிடம் கட்டுவதற்காக ஒன்றியம் பங்குத்தொகை செலுத்துவதற்கு ஒப்புக்கொள்ள வேண்டும். அந்தத் தொகை, முதல் கால்நடை மருந்தகம் என்றால் 25 சத விகிதம் ஒன்றியம், 75 சத விகிதம் அரசு ; இரண்டாவது கால்நடை மருந்தகம் என்றால் 50 சத விகிதம் ஒன்றியம், 50 சத விகிதம் அரசு ; மூன்றாவது கால்நடை மருந்தகம் என்றால் 75 சத விகிதம் ஒன்றியம், 25 சத விகிதம் அரசு; நான்காவது கால்நடை மருந்தகம் என்றால் 100 சத விகிதமும் ஊராட்சி ஒன்றியம் என்ற அடிப்படையிலே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆகவே, மக்களுடைய ஒத்துழைப்பை ஏற்றுக்கொண்டு அந்த இடத்திலே கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்று திட்டம் இல்லை. ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். தீர்மானம் நிறைவேற்றிக் கொடுத்தால் அந்த இடத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவரவர்களே, 3 கால்நடை மருந்தகங்கள் உள்ள ஊராட்சி ஒன்றியம் எத்தனை இருக்கின்றன என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

1981 ஏப்ரல் 25]

(ஆ) கால்நடைகளின் நோய் நீக்கப் பணிகளுக்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் குறைந்த பட்சம் 2 கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், கால்நடைகளின் எண்ணிக்கை, ஏற்கனவே கால்நடை நிலையத்தின் அருகாமை, நிதி நிலைமை, எவ்விடத்தில் மிக அவசியமாகத் தேவைப்படுகிறதென்பதை ஆராய்ந்து ஒவ்வொரு ஆண்டும், கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இரண்டு கால்நடை மருந்தகங்கள் அமைக்கப்படவேண்டும் என்று அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி 376 ஒன்றியங்களிலும் இரண்டு கால்நடை மருந்தகங்கள் வந்தாலும் கூட, அது தேவையைப் பூர்த்தி செய்வதாக அமையாது. எனவே, இப்போது மக்கள் நல்வாழ்வுத் துறையில் செயல்பட்டு வருகிற 'மொபைல் மருந்தகம்' போல் நடமாடும் மருத்துவ மனைகள் உருவாக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி அரசு பரிசீலித்து பின் செயல்படுத்தப்படும்.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, இந்தக் கால்நடை மருத்துவமனைகளில் மிகவும் சிக்கனமானதும் சக்தி வாய்ந்ததுமான சித்த வைத்திய முறைகளை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, சித்த வைத்திய முறை ஓரளவுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதை விரிவாக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கால்நடை கிளை பராமரிப்பு நிலையங்களில் பெரும்பகுதி பணியாளர்கள் இல்லாமல் மூடிக்கிடக்கின்றன. அவைகளை மீண்டும் பயன்படுத்துவதற்குத் திறந்து, பணியாளர்களையும் நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, அதைப் பற்றிய விவரம் என்னிடம் இல்லை. எந்தக் கால்நடை மருந்தகத்தில் பணியாள் இல்லை, எங்கே மூடிக்கிடக்கிறது என்ற விவரங்களைக் கொடுத்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒவ்வொருவருக்கும் மாதத்திற்கு எவ்வளவு செலவிடப்படுகிறது? அதில் இருந்து குணம் பெற்று வெளியேறுகிறவர்களுக்கு வேலைவாய்ப்புத் தேடித்தர அரசு முன்வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசினர் மறுவாழ்வு இல்லத்தில் 261 ஆண்களும், 76 பெண்களும், 56 சிறுவர்களும்—ஆக மொத்தம் 393 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் வயது வந்தவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் அன்றாட உணவுக்காக செலவிடப்படும் தொகை ரூ. 2.30 பைசா, 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு ரூ. 1.15 பைசா, எலும்புருக்கி நோயாளிகளுக்கு ஒரு நோயாளிக்கு ரூ. 3.77 பைசா வீதம் செலவிடப்படுகிறது.

திரு. வே. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டில் இருக்கின்ற தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் பார்ப்பதற்கு அருவருப்பாகவும், தொழுநோய்க்குச் சரியாக வைத்தியம் பார்த்துக் கொள்ளாததால் மற்றவர்களுக்கு அதைப் பரவிடும் முறையிலும் இருக்கிறார்கள். அதோடு, வெளிநாட்டினர் வருகின்றபோது அவர்கள் துறைமுகங்களின் முன்னாலே பிச்சை எடுத்துக்கொண்டு இருப்பதாலே, கட்டாயமாக அவர்களைப் பிடித்து வந்து, வைத்தியச் சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் சேர்ந்துள்ளவர்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி செய்யப்பட்டு வருகிறது.

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் கால்நடை மருத்துவ மனைகள் ஏற்படுத்தும் திட்டம்.

* வினா எண் 888.—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது இரண்டு கால்நடை மருத்துவ மனைகளைக் கொண்டுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் எத்தனை?

(ஆ) அனைத்து ஊராட்சி—ஒன்றியங்களிலும் இரண்டு கால்நடை மருத்துவமனைகளை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) 179 ஊராட்சி ஒன்றியங்கள்.